**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**16th ஜூன் / June 2024 ஞா யிறு ஆராதனை**

**ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு**
Call to Worship — Mr. Jacob Johnson babu

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — **Choir**

**ஜெபம்** — **திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு**
Prayer — Mr. Jacob Johnson babu

**தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**கர்த்தர் தாம் எங்கள் துர்க்கமும்**

*1. கர்த்தர் தாம் எங்கள் துர்க்கமும்*
அரண பலமுமாமே
உண்டாம் இக்கட்டனைத்தையும்
போக்குவார் அவர் தாமே
பொல்லாங்கனின் சினம்
இப்போது மா விஷம்,
துஷ்டமும் சூதையும்
அணிந்து உறுமும் -
நிகர் புவியில் இல்லை.

2. எதற்கு நாங்கள் வல்லவர்?
இந்நீசர் சக்தியற்றோர்
எங்களுக்காய் வேறொருவர்
போர்செய்வதற் கேற்பட்டோர்.
ஆர்? இயேசு கிறிஸ்துதான்
ஆ இந்தப் பலவான்
ஆம் எங்கள் ரட்சகர்,
சேனாபதி அவர்,
ஜெயிப்பார் அவர்தாமே.

3. விழுங்க வரும் பேய்களால்
புவி நிரம்பினாலும்
பயப்படோம் கர்த்தாவினால்
எதிர்த்து நிற்கக்கூடும்.
இருளின் பிரபு
சீறினாலும் அது
நசுக்கப்பட்ட பேய்,
தள்ளுண்ணத் தீர்ந்ததே;
ஓர் சொல்லினால் ஒழியும்.

4. பகைஞர் தெய்வ வார்த்தையை
பகைத்தும், அது நிற்கும்;
கர்த்தர் சகாயர், அவர் கை
வரம் தந்தாதரிக்கும்.
மாற்றார்கள் யாவையும்
ஜீவனையேதானும்
வாங்கினால், கேடாமோ?
இராஜ்ஜியமல்லோ
எங்களுக்கே யிருக்கும்.

**மாறி வாசித்தல் 24ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
"சங்கீதம் 72" — Congregation

"நீதி நியாயம் செழித்தோங்குக"

**Psalter Reading "Psalm 72"**

**தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. சி.ஜெபக்குமார்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. C. Jebakumar

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

**காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**பாதம் ஒன்றே வேண்டும்**

**பாதம் ஒன்றே வேண்டும்; - இந்தப்**
**பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் – உன்**

1. நாதனே, துங்கமெய் - வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய - தூதர் தொழுஞ் செய்ய. – பாதம்

2. சீறும் புயலினால் வரரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் - நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமழ் கொண்ட - வாசனைத் தைலத்தை
ஆசையுடன் - மரி - பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த நற் - பாதம்

5. நானிலத்தோர் உயர் - வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் -தானே கொடுத்த உன் – பாதம்

6. பாதம் அடைந்தவர்க் - காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு நாதனே, என்றும் உன் – பாதம்

**பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

**திருமறைப் பாடம்** — **மிஸ். வானிட்டா எம்மா**
***ரூத் 1 : 1 - 18*** — Miss. Juanita Emma
Scripture Reading :
**Ruth 1 : 1 - 18**

**அருளுரை** — **மறைதிரு. சி.ஜெபக்குமார்**
Sermon — Rev. C. Jebakumar

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

**<u>நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பிவந்தேனே</u>**

**நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பிவந்தேனே, - திவ்ய**
**சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பிவந்தேனே.**

*1. தம்பிரான் ஒருவனே, தம்பமே தருவனே; - வரு*
*தவிது குமர குரு பரமனுவேலே*
*நம்பிவந்தேனே. - நான்*

*2. நின்பாத தரிசனம் அன்பான கரிசனம் - நித*
*நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில் நம்பிவந்தேனே. – நான்*

*3. நாதனே,கிருபைகூர் வேதனே, சிறுமைதீர், - அதி*
*நலம் மிகும் உனதிரு திருவடி அருளே நம்பிவந்தேனே, - நான்*

*4. பாவியில் பாவியே, கோவியில் கோவியே - கன*
*பரிவுடன் அருள்புரி, அகல விடாதே நம்பிவந்தேனே. – நான்*

*5 ஆதி ஓலோலமே, பாதுகா காலமே - உன*
*தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த நம்பிவந்தேனே. – நான்*

---

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***ரூத் 1 : 16***
**Ruth 1 : 16**

16. **அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்துஇ என்னோடே பேசவேண்டாம் நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.**

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. சி.ஜெபக்குமார்***
Closing Prayer & Benediction — Rev. C. Jebakumar

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**